12TH STD

# திருப்புதல் தேர்வு - 2024
# வணிகவியல்

நேரம் : 3.00 மணி — மதிப்பெண் : 90

## பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர் ---------
   அ) ஃ போயல் ஆ) டேலர் இ) மேயோ ஈ) ஜேக்கப்

2. “மேலாண்மை என்பது பன்னோக்கு செயல், அது வியாபாரத்தை மேலாண்மை செய்கின்றது. மேலாளரை மேலாண்மை செய்கிறது. மேலும் பணியாளரையும், பணியினையும் மேலாண்மை செய்கிறது” என்று கூறியவர்
   அ) ஜார்ஜ் ஓடியோர்ன் ஆ) ஹென்றி ஃ போயல் இ) பீட்டர்.F. டிரக்கர் ஈ) F. W. டேலர்

3. பின்வருவனவற்றுள் சரிபார்ப்பு செயல்பாடு எது?
   அ) திட்டமிடுதல் ஆ) ஒழுங்கமைத்தல் இ) பணிக்கமர்த்துதல் ஈ) கட்டுப்படுத்துதல்

4. ஒரு இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு பத்திரம் எத்தனை முறைவிற்கப்படலாம்?
   அ) ஒரே ஒரு முறை ஆ) இரண்டு முறை இ) மூன்று முறை ஈ) பல முறை

5. மூலதனச் சந்தை ----------- ஐ வழங்குவதில்லை.
   அ) குறுகியகால நிதி ஆ) கடனுறுதி பத்திரங்கள் இ) சமநிலை நிதி ஈ) நீண்டகால நிதி

6. பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு --------------
   அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி இ) பாரதஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

7. நாட்டில் ----------- பங்குச் சந்தைகள் உள்ளன.
   அ) 21 ஆ) 24 இ) 20 ஈ) 25

8. பொருத்துக
   1. வருநிகழ்வுசார் சரக்கு --- a. எதிர்கால சரக்கு
   2. ஒப்பிய சரக்கு --- b. இனம் கண்டு ஒப்புக்கொள்ளப்பட்ட சரக்கு
   3. உறுதியிடா சரக்கு --- c. இனம் காணப்படாத சரக்கு
   4. உறுதி செய்யப்பட்ட சரக்கு --- d. உணரப்பட்ட சரக்கு

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | d | a | c | b |
| ஆ. | b | c | d | a |
| இ. | c | a | d | b |
| ஈ. | a | b | c | d |



9. மனித வளம் என்பது ஒரு ----------------- சொத்து.
   அ) கண்ணுக்கு புலனாகும் ஆ) கண்ணுக்கு புலனாகா இ) நிலயான ஈ) நடப்பு

10. இந்தியாவில் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியம் (SEBI) தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு-------
    அ) 1988 ஆ) 1992 இ) 1995 ஈ) 1998

11. விளம்பரம் என்பது ஒரு ---------------ஆட்சேர்ப்பு வளமாகும்.
    அ) அக வளங்கள் ஆ) புறவளங்கள் இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்

12. பங்கு பரிவர்த்தனை சந்தை மேலும் இவ்வாறு அழைக்கப்படுகிறது.
    அ) களச்சந்தை ஆ) உள்ளூர் சந்தை
    இ) பத்திரங்கள் சந்தை ஈ) தேசிய சந்தை

13. நுகர்வோர் இயக்கத்தின தந்தை யார்?
    அ) மகாத்மா காந்தி ஆ) ஜான் எப். கென்னடி இ) ரால்ப் நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

14. பொருத்தமற்ற விண்ணப்பதாரரை நீக்குவதற்கான செயல்முறை ------------- என அழைக்கப்படுகிறது.
    அ) தேர்வு ஆ) ஆட்சேர்ப்பு இ) நேர்காணல் ஈ) தூண்டுதல்

15. கீழ்கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது?
    அ) இடக்கூறு ஆ) பொருள் கூறு இ) திட்டக் கூறு ஈ) விலை கூறு

16. எத்தனை மாதங்களுக்கு பின் காசோலை காலாவதியாகிறது?
    அ) 3 மாதங்கள் ஆ) 5 மாதங்கள் இ) 4 மாதங்கள் ஈ) 1 மாதம்

17. சரக்கு விற்பனை ஒப்பந்தத்திற்கு எது முக்கிய உறுப்பாக இருக்கிறது?
    அ) இருதரப்பினர் ஆ) சொத்துரிமை மாற்றம் இ) விலை ஈ) அனைத்தும்

18. ஒரு நபரின் கருத்து மற்றும் எண்ணங்களின் வெளிப்பாட்டின் மூலம் நிறுமத்தை தோற்றுவித்தால் அவர் ------------------
    அ) இயக்குநர் ஆ) நிறும செயலாளர் இ) பதிவாளர் ஈ) தோற்றுவிப்பாளர்

19. ஒரு பொது நிறுமத்தில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் ------------ அல்லது அதற்கு மேல் இருக்கும் பொழுது சிறிய பங்குதாரர்களால் இயக்குனர் தேர்ந்தெடுக்கப்படலாம்.
    அ) 1 கோடி ரூபாய் ஆ) 3 கோடி ரூபாய் இ) 5 கோடி ரூபாய் ஈ) 7 கோடி ரூபாய்

20. நிறுமம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து -------------- மாதத்திற்குள் முதல் ஆண்டு பொதுக்கூட்டத்தை கூட்ட வேண்டும்.
    அ) 12 ஆ) 15 இ) 18 ஈ) 21

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 30- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. அதிகாரம் என்பதன் பொருள் தருக.
22. தரகர் என்று யாரை அழைக்கப்படுகிறார்கள்?
23. மூலதனச் சந்தை என்றால் என்ன?
24. அரசுப் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?
25. தேர்ந்தெடுத்தல் என்றால் என்ன?
26. ஆட்சேர்ப்பு முறையில் வேட்டையாடுதல் என்றால் என்ன?
27. சந்தையிடுகை கலவையின் வரைவிலக்கணம் தருக
28. தனியார்மயமாக்கல் என்றால் என்ன?
29. மேலாண்மையின் துணைப் பணிகளை பட்டியலிடுக.
30. மேலாண்மையில் முக்கிய நபர்களை எவ்விதமான நிறுமங்கள் நியமனம் செய்திருக்க வேண்டும்?

## பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 40- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. மேலாண்மையின் வீச்செல்லையை தீர்மானிப்பவை எவை?
32. பங்குச் சந்தையின் குறைபாடுகளை விவரி? ( ஏதேனும் 3 )
33. எப்பொழுது மாற்று இயக்குனர்களை நியமிக்கலாம்?
34. சிறப்பு தீர்மானம் என்றால் என்ன?
35. இருக்கின்ற சரக்கு என்பதை விவாதிக்க
36. குறை தீர்ப்பு குறிப்பு வரைக.
37. காலத்தின் அடிப்படையில் சந்தையினை எப்படி வகைப்படுத்துவாய்?
38. செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
39. சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை? ( ஏதேனும் 3 )
40. மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் யார்?

## பகுதி --- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35

41. அ) நுகர்வோரின் கடமைகளை விளக்குக? ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக



42. அ) பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி. ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) மேலாண்மயின் பல்வேறு பணிகளை விளக்குக. ( ஏதேனும் 5 )

43. அ) காசோலையின் இயல்புகள் கூறி விளக்குக. ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) இயக்குனரின் தகுதிகள் பற்றி கூறுக

44. அ) பங்குகளுக்கும், கடன் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரி ( ஏதேனும் 5 )

45. அ) செபியின் பணிகளை விவரி. ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) எல்பிஜி (LPG) யின் சிறப்பு அம்சங்களை விளக்குக. ( ஏதேனும் 5 )

46. அ) மனித வள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக. ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு மின் சந்தையிலிருந்து வேறுபடுகிறது - விளக்கு

47. அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்கு. ( ஏதேனும் 5 )